டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in
agridoctor.in | 24.01.2025 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 178 - Madurai | Online Edition

கல்யாண் ஜுவல்லர்ஸ்

# குஜராத் மாநிலம் ஹலோலில் இயற்கை விவசாயம் குறித்த இரண்டு நாள் தேசிய பயிலரங்கு

## மத்திய வேளாண் அமைச்சகம் நடத்துகிறது

புது தில்லி, ஜன.23

குஜராத் ஆளுநர் ஆச்சார்யா தேவவிரத், குஜராத்தின் ஹலோலில் உள்ள குஜராத் இயற்கை வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்தில் மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள இயற்கை விவசாயம் குறித்த இரண்டு நாள் தேசிய பயிலரங்கை நேற்று (23.1.25) தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் பேசிய ஆளுநர், இயற்கை விவசாயம் மண்ணின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதோடு



விவசாயிகள் வெளிப்புற சந்தையை சார்ந்திருப்பதைக் குறைக்கிறது மற்றும் உள்ளீட்டு செலவுகளையும் குறைக்கிறது என்றும் அவர் கூறினார்.

அத்துடன் நமது எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாப்பான, ஆரோக்கியமான உணவை இயற்கை வேளாண்மை வழங்குகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

பயிலரங்கில் பேசிய மத்திய அரசின் வேளாண்துறைச் செயலாளர் டாக்டர் தேவேஷ் சதுர்வேதி, மத்திய அரசால் தொடங்கப்பட்டுள்ள இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கம், இயற்கை விவசாயத்தை கடைப்பிடித்து வரும் விவசாயிகளிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது என்றார்.

வேளாண் நடைமுறைகளை அறிவியல் பூர்வமாக வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது என அவர் கூறினார்.




இமாச்சலப் பிரதேசம், ராஜஸ்தான், ஹரியானா, குஜராத், ஜார்க்கண்ட், தமிழ்நாடு, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்கள், ஜம்மு – காஷ்மீர் யூனியன் பிரதேசம் ஆகியவற்றை சேர்ந்த இயற்கை விவசாய ஆர்வலர்கள் 90 பேர் இந்த தேசிய பயிலரங்கில் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த இரண்டு நாள் தேசிய பயிலரங்கு இயற்கை வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தில் மேற்கொள்ளப்படும் பயிற்சி நடவடிக்கைகளில் முதலாவதாகும்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# விதைகளை பரிசோதிக்க விவசாயிகளுக்கு அழைப்பு

திருவண்ணாமலை, ஜன.23

திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் தங்களிடம் உள்ள புதிய நெல் விதைகள் மற்றும் உளுந்து விதைகளை விதைப் பிற்கு முன் விதைகளின் தரத்தினை பரிசோதனை செய்து கொள்ளலாம்.

விதைகளை பரிசோதனை செய்வதன் மூலம் இடுபொருட்கள் செலவினை குறைத்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும். குறைந்த செலவில் அதிக மகசூல் பெற விதைபரிசோதனை செய்தபின் விதைகளை பயன்படுத்துவதன் மூலம் விதைகளின் முளைப்புதிறன் குறைபாடு இல்லாமல் இருப்பதையும் விதைகளில் பிற இரக விதைகள் உள்ளதா என்பதை அறிவதன் மூலம் கலப்பு விதைகள் பயன்படுத்துவதை தவிர்க்கலாம். மேலும் விதையின் ஈரப்பதம் மற்றும் சுத்தத்ன்மை ஆகிய வற்றை அறிந்து பயன்படுத்துவதன் மூலம் பயன்டுத்தும் விதைகள் முளைக்க தரமானதா என்பதை தெரிந்து கொள்ளலாம்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு விதைப்பரிசோதனை நிலையத்தில் விவசாய பெருமக்கள் தங்களிடம் உள்ள விதைகளை அனுப்பி அவற்றின் ஈரப்பதம்இ பிற இரககலவன், முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் பூச்சி நோய் தாக்குதல் ஆகியனவற்றை பரிசோதனை செய்து அதன் பின்பு விதைப்பு செய்து அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபம் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. விதை மாதிரிகளை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். விதைகளை அனுப்பும் போது பயிரின் பெயர், இரகம் மற்றும் குவியல் எண் ஆகியவை குறிப்பிட்ட விண்ணப்ப படிவத்துடன் ஒரு மாதிரிக்கு ரூபாய் 80/- வீதம் விதைப்பரிசோதனைக் கட்டணம் சேர்த்து அனுப்புதல் வேண்டும். விதை மாதிரிகளை மூத்த வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், டாங்காப் கட்டிடம், வேங்கிக்கால், திருவண்ணாமலை 606 604 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


Rithvik® Pipe
PIPING FOR LIFE
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
இந்தியாவில் முதல் முறையாக ISI PVC பைப்புகளுக்கு
25 வருட உத்திரவாதம் தரும் ஓரே நிறுவனம்
ஒவ்வொரு பைப்புகான ஆய்வக சோதனை அறிக்கை ஒவ்வொரு பைப்பிலும் QR CODE மூலம் கொடுக்கபட்டுள்ளது.
ஒவ்வொரு பைப்புக்கும் 25 வருட உதிரவாதம் (6 KG - க்கு மேல்)
ஒவ்வொரு ரித்விக் பிவிசி பைப்புகளும் இந்திய தர நிர்ணய பணியகம் (பிஐஎஸ்) நிர்ணயித்த கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தபட்டு தயாரிக்கப்படுகிறது.
ஒவ்வொரு ரித்விக் PVC பைப்புகள் உயர்தர மூலப்பொருட்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. தரம் மற்றும் நீண்ட ஆயுளை உறுதி செய்கிறது.
வியாபார தொடர்புக்கு
வெங்கடரமனன் - 7561822226,9645877779
RITHVIK PIPE

# திருப்பூர் விதைப்பரிசோதனை நிலையத்தில் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு இணை இயக்குநர் ஆய்வு



திருப்பூர், ஜன.23

திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில் இயங்கி வரும் விதைப் பரிசோதனை நிலையத்தில் சென்னை, விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு இணை இயக்குநர் தபேந்திரன் 21.1.25ல் அன்று ஆய்வு மேற்கொண்டார். திருப்பூர் விதை பரிசோதனை நிலையத்தில் ஜனவரி 2025 வரையிலான சான்று விதை மாதிரிகள், ஆய்வு விதை மாதிரிகள் மற்றும் பணி விதை மாதிரிகளின் லக்கு மற்றும் சாதனை விவரம் ஆய்வு செய்யப் பட்டது. ஆய்வு முடிவுகள் குறித்த காலத்தில் விதை உற்பத்தி யாளர், விதை விற்பனையாளர் மற்றும் விவசாயிகளுக்கு சென்றடைகின்றதா என்பதை ஆய்வு செய்தார். ஆண்டு இலக்கை முழுமையாக முடிக்கவும் அறிவுத்தினார். மேலும் சூஆஹநுகூ திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அனைத்து இயந்திரங்களும் சரியாக செயல்படுகிறதா எனவும் ஆய்வு செய்து அதன் செயல் விளக்கத்தையும் பார்வையிட்டார்.

முளைப்புத்திறன் அறையில் பராமரிக்கப்படவேண்டிய தட்ப வெப்ப நிலை, ஈரப்பதம் மற்றும் வெளிச்சத்தின் அளவு சரியாக உள்ளதா என்பதை ஆய்வு செய்தார். விதை மாதிரிகள் நிர்ணயிக்கப்பட்ட வழிமுறைகளை கையாண்டு பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறதா என்பதனையும் ஆய்வு செய்தார். விதைகளை சேமிக்கும் அறையில் சரியான வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகிறதா என்பதனையும் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது விதை பரிசோதனை அலுவலர் சை.நர்கீஸ், கோவை மற்றும் திருப்பூர் விதைச்சான்று உதவி இயக்குநர்கள் மாரிமுத்து மற்றும் மணிகண்டன் மற்றும் மூத்த வேளாண்மை அலுவலர் ஜோ.வளர்மதி மற்றும் வேளாண்மை அலுவலர் கு.கிருஷ்ணப்பிரியா ஆகியோர் உடனிருந்தனர்.

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் — 23.01.2025

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 20 | 24 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 20 | 24 | 57 | உருளை (பிற) | 30 | 36 |
| 1B | கத்திரி(Nadu) | 25 | 30 | 57A | உருளை(ஊட்டி) | 28 | 58 |
| 2 | வெண்டை | 40 | 48 | 58 | மேரக்காய் | 16 | 20 |
| 3 | தக்காளி (நாடு) | 17 | 20 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 20 | 26 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 15 | 18 | 60 | கேரட் | 50 | 54 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 40 | 44 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 45 | 50 |
| 6 | புடலை | 35 | 40 | 62 | நூல்கோல் | 25 | 30 |
| 7 | பீர்க்கன் | 30 | 36 | 63 | டர்னிப் | 25 | 30 |
| 8 | சுரைக்காய் | 18 | 22 | 64 | மு.கோஸ் | 20 | 25 |
| 9 | பாகற்காய் | 30 | 36 | 65 | | | |
| 10 | கொத்தவரை | 30 | 36 | 66 | காளிபிளவர் | 35 | 40 |
| 11 | பூசணி | 14 | 18 | 67 | பட்டாணி | 65 | 70 |
| 12 | அரசாணி | 14 | 18 | 68 | பூண்டு | 200 | 265 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 35 | 40 | 69 | இஞ்சி | 35 | 40 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 35 | 40 | 70 | புருக்கோலின் | 110 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 84 | 88 | 71 | பென்னி பீன்ஸ் | 40 | 45 |
| 16 | பெ.வெங்காயம் | 40 | 45 | 72 | குடமிளகாய் | 50 | 60 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 35 | 38 | 73 | ஊட்டி அவரை | 130 | 140 |
| 18 | பச்சை மொச்சை | 40 | 46 | | | | |
| 19 | முருங்கை | 110 | 116 | | | | |
| 20 | தேங்காய் | 60 | 65 | | | | |
| 21 | மாங்காய் | 120 | 125 | | | | |
| 22 | வாழைக்காய் | 40 | 45 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 48 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 50 | 60 |
| 25 | சேப்பங்கிழங்கு | 55 | 60 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 40 | 45 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 75 | 80 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 25 | 30 | 80 | திராட்சை | 70 | 80 |
| 30 | புதினா | 9 | 10 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 220 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 70 | 80 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயக்கீரை | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 64 | 68 |
| 40 | கோவக்காய் | 30 | 34 | 91 | பூவன் | 40 | 44 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 50 | 55 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 44 | 48 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 35 | 40 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 18 | 22 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 20 | 26 | 96 | நேந்திரன் | 70 | 75 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 28 | 32 | 97 | செவ்வாழை | 95 | 100 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | | |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 30 | 34 | 100 | கறிப்பலா | 40 | 44 |
| 50 | நிலக்கடலை | 60 | 65 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 25 | 30 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | 103 | Seedless திராட்சை(ப/க) | 140 | 160 |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 38 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 27 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 22 | 26 | | | | |
| 55A | துவரை | 35 | 40 | | | | |


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் நெல் திருவிழா நடந்தது




விருதுநகர், ஜன.23

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரத்தில் வேளாண்மை துறையின் கீழ் 22.01.25 அன்று வி.பி.எம்.எம் பொறியியல் கல்லூரியில் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் மாவட்ட அளவிலான நெல் திருவிழா வேளாண்மைத் துறை சார்பாக நடத்தப்பட்டது.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெயசீலன் தலைமை ஏற்று இணைய வழியில் துவக்கி வைத்தார். ஸ்ரீவில்லிபுத்தூர், இராஜபாளையம், வத்திராயிருப்பு வட்டாரம் சார்ந்த 300-க்கும் மேற்பட்ட நெல் விவசாயிகள் கலந்து கொண்டனர். இவ்விழாவில் வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மற்றும் பேராசிரியர்கள், வேளாண்மை துறை, சகோதர துறை அலுவலர்கள் மற்றும் வேளாண் சார்ந்த தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் அனைத்து துறை சார்பாகவும், தனியார் நிறுவனங்கள் சார்பாக கண்காட்சி அமைக்கப்பட்டது. திருவில்லி புத்தூர் வேளாண் துறை சார்பாக நெல் இரகங்கள், பாரம்பரிய ரகங்கள், திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள் மற்றும் புசிறீபு தொழில்நுட்பங்கள் மற்றும் விதை நேர்த்தி செயல் விளக்கங்கள் காண்பிக்கப்பட்டது. இதர துறைகளின் சார்பாக திட்டங்கள் சம்மந்தப்பட்ட கண்காட்சி அமைத்து இருந்தனர். சொட்டு நீர் பாசனம் நிறுவனங்கள், உர உற்பத்தி நிறுவனங்கள், உழவர் உற்பத்தி கம்பெனி சார்பாக கருத்துக் காட்சியும், வேளான் இயந்திர விற்பனை நிலையங்கள், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பாக நவீன இயந்திர காட்சி படுத்தப்பட்டு செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

இவ்விழாவில் விருதுநகர் வேளாண்மை இணை இயக்குனர் விஜயா கண்காட்சியை பார்வையிட்டு வேளாண் இயந்திர மயமாக்கும் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு சுழல்கலப்பை மற்றும் பவர் வீடர் ஆகியவற்றை வழங்கினார்.

இவ்விழாவில் அருப்புக்கோட்டை வேளாண்மை அறிவியல் நிலைய வேளாண் விஞ்ஞானிகளான, உதவிப் பேராசிரியர் முனைவர் பா வேணு தேவன், உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்கள் பற்றியும், உதவி பேராசிரியர் முனைவர் சித்ரா, நெல்லில் விதை நேர்த்தி தொழில்நுட்பங்கள் பற்றி விவசாயி களுக்கு செயல் விளக்கத்துடன் எடுத்துரைத்தார். அதனைத் தொடர்ந்து பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் செல்வி ரமேஷ், ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை தொழில் நுட்பங்கள் பற்றியும், ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எம் ராஜு, மேம்படுத்தப்பட்ட சாகுபடி தொழில்




நுட்பங்கள் பற்றியும், இணை பேராசிரியர் முனைவர் சி விஜயராகவன் ஒருங்கிணைந்த பூச்சி மலாண்மை தொழில் நுட்பங்கள் பற்றியும், பேராசிரியர் முனைவர் ஆர் விமலா, ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை தொழில்நுட்பங்கள் பற்றியும், பேராசிரியர் முனைவர் ஜோதி பாசு, மண்வளம் குறித்தும், ஜே பி அக்ரி நிறுவனத்தின் உரிமையாளர் பழனிஸ்வர், இயற்கை உரங்களின் முக்கியத்துவம் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். விழாவின் நிறைவில் விவசாயிகளிடம் எழுந்த சந்தேகங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும் இவ்விழாவில் வேளாண்மை துணை இயக்குநர்கள் நாச்சியார், முனைவர் ரமேஷ், முத்து லட்சுமி, லதா, சுபா வாசுகி மற்றும் உதவி இயக்குநர் சுப்பாராஜ், செல்வராணி, திலகவதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதற்கான ஏற்பாட்டை திருவில்லிபுத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் தனலட்சுமி தலைமையிலான தொழில்நுட்ப அலுவலர்கள் செய்து இருந்தனர்.

# ஆமணக்கு சாகுபடித் தொழில்நுட்பங்கள்!

**இரகம்** டி.எம்.வி-5. ஒய்.ஆர்.சி.எச்-1 மற்றும் ஒய்.ஆர்.சி.எச் 2

**பருவம்** – மே-ஜூன், நவம்பர்- டிசம்பர்

**விதை அளவு**

இரகம் ஹெக்டருக்கு 10 கிலோ

கலப்பினம்/ வீரிய ஒட்டு ஹெக்டருக்கு 5 கிலோ

**விதை நேர்த்தி**

ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டாசிம் கலந்து விதைக்கவும். மானாவாரியில் விதைப்பிற்கு 3 மணி நேரத்திற்கு முன்னர் 1 சதம் பொட்டாசியம் குளோரைடு கொண்டு விதை கடினப்படுத்தல் செய்து விதைக்கவும்.




**பயிர் இடைவெளி**

இறவை – **இரகம் :** 90x90 செ.மீ. **கலப்பினம் :** 150x120 செ.மீ.

மானாவாரி – **இரகம் :** 90x60 செ.மீ. **கலப்பினம் :** 120x90 செ.மீ.

**நீர் மற்றும் களை மேலாண்மை**

பூக்கும் மற்றும் காய்பிடிக்கும் பருவங்களில் நீர் நிர்வாகம் மிக முக்கியமானவை.

பென்டி மெத்தாலின் ஹெக்டருக்கு 3 லிட்டர் வீதம் விதைத்த 3-ஆம் நாளில் களை முளைக்கும் முன்னர் தெளிக்க வேண்டும். இல்லையெனில் விதைத்த 20 மற்றும் 40 ஆம் நாளில் கைகளால் களை எடுக்க வேண்டும்.

**உர மேலாண்மை**

ஒரு ஹெக்டருக்கு 12.5 டன் தொழுஉரம் இடவேண்டும் மண் பரிசோதனையின் அடிப்படையில் உரமிடுதல் சிறந்தது. இல்லை யெனில் பின்வரும் பரிந்துரையை பின்பற்றவேண்டும்.

**இறவை-இரகம்** 60:30:30 கிலோ தழை, மணி, சாம்பல் சத்து

**கலப்பினம் :** 90:45:45 கிலோ தழை மணி சாம்பல் சத்து

**மானாவாரி-இரகம்** 45:15:15 கிலோ தழை, மணி, சாம்பல் சத்து

**கலப்பினம் :** 60:30:30 கிலோ தழை, மணி, சாம்பல் சத்து

**பயிர் பாதுகாப்பு முறைகள்**

பூச்சி மற்றும் நோய்க் கட்டுப்பாடு, தண்டு மற்றும் காய் துளைப்பான்

ஃப்ரப்னோபாஸ் 1.5 மில்லி ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். பூக்கும் தருணத்தில் தெளித்தல் மிக அவசியம்.

**காவடிப்புழு**

5 சதவீதம் வேப்பங்கொட்டை கரைசல் தெளிக்கவும் அல்லது குளோரோபைரிபாஸ்/ குவினல்பாஸ் மருந்தினை 1 லிட்டர் நீருக்கு 2 மில்லி வீதம் கலந்து தெளிக்கவும்.

**சுருள் பூச்சி**

5 சதவீதம் வேப்பங்கொட்டை சாறு தெளிக்கவும்

**வாடல் நோய்**

2.5 கிலோ டிரைக்கோடிடர்மா விரிடியை 50 கிலோ தொழு உரத்துடன் கலந்து இடவும்.

**இலைப்புள்ளி நோய்**

மாங்கோசெப் 2.5 கிராம் 1 லிட்டர் நீரில் கலந்து 15 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்க வேண்டும்.

**சாம்பல் நோய்**

ஹெக்சகோனசால் ஒரு லிட்டர் நீருக்கு 2 மில்லி வீதம் கலந்து தெளிக்க வேண்டும்.

**அறுவடை**

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆமணக்கு முத்துக்கள் காய்ந்து இருக்கும்போது அறுவடை செய்ய வேண்டும்.

**மகசூல்** – ஹெக்டருக்கு 1000 கிலோ வரை மகசூல் கிடைக்கும்.

இதனை சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வேளாண்மை உதவி இயக்குனர் சாகுல் அமீத் தெரிவித்தார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# இயற்கை இடு பொருட்கள் (கரைசல்) தயாரிப்பு எப்படி?

நேற்றைய தொடர்ச்சி...

மகசூலை அதிகரிக்க உதவும் இயற்கை இடுபொருள் தயாரிப்பு.

**பஞ்சகாவ்யா**

இது இயற்கை முறையில் தயார் செய்ய க்கூடிய ஒரு அடர் கலவையாகும்.பசுவிடம் இருந்து பெறப்படும் 5மூலப் பொருட்கள் மூலமாக இந்த பஞ்சகாவ்யா தயாரிக்கபடுகிறது.

**தேவையான பொருட்கள்**

பசஞ்சாணம் 5 கிலோ
பசுவின் கோமியம் = 3 லிட்டர்
பசும்பால் = 2 லிட்டர்
தயிர் = 2 லிட்டர்
நெய் = 1 லிட்டர்
கரும்புசாறு = 3 லிட்டர்
இளநீர் = 3 லிட்டர் மற்றும் நாட்டு சர்க்கரை 2 கிலோ.

**தயாரிக்கும் முறை**

பசுஞ்சாணம் 5கிலோ வுடன்பசு நெய் கலந்து ஒரு பிளாஸ்டிக் வாளியில் 4நாட்கள் வைத்து தினமும் காலை, மாலை என இரு முறை பிசைந்து விட வேண்டும். 5வது நாள் மற்ற பொருட்களுடன் இவைகளை ஒரு வாய் அகன்ற மண் பானையில் / பிளாஸ்டிக் தொட்டியில் போட்டு நன்கு கரைத்து மூடி நிழலில் வைக்க வேண்டும்.

ஒரு நாளுக்கு இருமுறை வீதம் காலை / மாலை யில் 20 நிமிடங்கள் கிளறி விட வேண்டும். இது பிராண வாயுவை பயன்படுத்தி வாழும் நுண்ணியிர்களின் செயல்திறனை ஊக்குவிக்கின்றது.

இந்த முறையில் 30 நாட்களில் பஞ்சகாவியா தயாராகி விடும்.

## இஞ்சி பூண்டு மிளகாய் கரைசல் (3 G கரைசல்)

**தேவையான பொருட்கள்**

இஞ்சி = அரை கிலோ

பூண்டு = அரை கிலோ

பச்சை மிளகாய் = அரை கிலோ

**தயாரிக்கும் முறை**

இந்த மூன்றையும் தனியாக தனியாக அரைத்து விழுதுபட வைக்க வேண்டும். அதன்பிறகு அரைத்த விழதுகளை நன்றாக கலந்து ஒரு வெள்ளை காடா துணியின் மூலமாக வடிகட்டு ( 7 லிட்டர் தண்ணீரில் முக்கி) வடிகட்டவேண்டும். இவ்வாறாக வடிகட்டியே கரைசலை 3 G கரைசலாகும். இது பூச்சி விரட்டியாகவும் பயன்படுத்தப்படுகிறது.




## அரப்பு மோர் கரைசல்

2 கிலோ அரப்பு இலை / உசிலை மர இலையை தேவையான அளவில் நீர் சேர்த்து அரைக்கவும். இதில் 5 லிட்டர் புளிச்ச மோரை சேர்த்து இக்கலவையை 7 நாட்கள் புளிக்க வைத்து ஒரு லிட்டர் கரைசலுக்கு 10 லிட்டர் தண்ணீர் சேர்த்து பயிருக்கு தெளித்தால் பூச்சிகள் கட்டுப்படுத்துவதுடன் பூஞ்சான நோய் களையும் தாங்கி வளரக்கூடியது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிரி தொழில்நுட்ப மகத்துவம் மையம் மற்றும் StartupTN இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்



கோயம்புத்தூர், ஜன.23

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் 1.06 லட்சம் சதுர அடி பரப்பளவில் நிறுவப்பட்டுள்ளது. இம்மையத்தின் மூலம் பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்கள் மற்றும் தொடக்க நிறுவனங்களுக்கு இடையே புதுமையான கண்டுபிடிப்புகள் மற்றும் மற்றும் அறிவுசார் தொழில்நுட்பங்களை பரிமாற்றம் செய்வதற்கு வழிவகுக்கும். பொது தனியார் கூட்டு முயற்சியின் மூலம் உயிர்த் தொழிநுட்பவியல், உயிர் தகவலியல், மரபியல், மூலக்கூறு கண்டறிதல், மரபணு தனிமைப்படுத்துதல், உயிரணு வளர்ப்பு மற்றும் வேளாண் இடுபொருட்கள் ஆகியவற்றை மேம்படுத்த உதவும். இதன் தொடக்கமாக, உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் மற்றும் வேளாண் தொடக்க நிறுவனங்களுக்கு இடையே ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 22.1.25ல் சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

உயிர்த்தொழில்நுட்ப மகத்துவ மையம் சார்பாக தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மைய இயக்குனர் முனைவர் ந.செந்தில் மற்றும் StartupTN நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி சிவராஜ ராமநாதன், தினேஷ்குமார் ஆகியோர்கள் கூடுதல் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் அதுல்ஆனந்த் முன்னிலையில் வேளாண்மை தொழில்முனைவோரை ஊக்கு விக்கும் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்த StartupTN உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி, தமிழ்நாட்டில் வேளாண்மை மற்றும் உயிரித்தொழில்நுட்ப startup வளர்ச்சியடையச் செய்ய, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் (MSME) மற்றும் StartupTN உடன் இணைந்து செயல்படுவதின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

# உளுந்து சாகுபடியில் அதிக மகசூல் பெற விதை பரிசோதனை அவசியம்



திருச்சி, ஜன.23

இந்திய விவசாயத்தில் தானியங்களுக்கு அடுத்தப்படியாக பருப்பு வகைகள் முக்கியப் பங்குவ கிக்கின்றன. இதில் புரதச்சத்து அதிக அளவில் இருப்பதால் உணவின் முக்கிய அங்கமாக விளங்குகிறது. உளுந்து குறுகிய கால பயிராக இருப்பதாலும்,வளிமண்டல நைட்ரஜனை நிலைநிறுத்தி. மண்ணின் வளத்தை மேம்படுத்துவதாலும், அடுத்தப் பயிருக்குத் தேவையான உரச்செலவை குறைப்பதோடு, அதிக விளைச்சல் தருவதால் இன்றைய சூழலில் உளுந்து பயிரிட பெரும்பாலான விவசாயப் பெருமக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

திருச்சி மாவட்டத்தில் நடப்பு தைப் பட்டத்தில் பரவலாக நெல்லுக்குப் பின் உளுந்து சாகுபடி பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. உளுந்தின் உற்பத்தியை பெருக்க தரமான விதைகளை பயன்படுத்துவதன் மூலம் சரியானஅளவு பயிர் எண்ணிக்கையை பராமரித்து அதிக விளைச்சல் பெற வாய்ப்புள்ளது. தரமான விதைகளே அதிக விளைச்சலுக்கு உத்திரவாதம் ஆகும்.


எனவே உளுந்துசாகுபடி செய்யும் விவசாயிகள் தமிழ்நாடு விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று துறையினரால் சான்றளிக்கப்பட்டு, சான்றட்டைபொருத்திய விதைகளையே பயன்படுத்த வேண்டும். இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதைகளின் தரப்படி உளுந்தின் முளைப்புத்திறன் 75%, ஈரப்பதம் 9% மற்றும் புறத்தூய்மை 98% என நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

விதைகளின் ஈரப்பதம் டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் நிலவும் கடும் பனிப்பொழிவின் காரணமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது. ஈரப்பதம் அதிகரித்தால் விதையின் தரம் குறைந்துவிடும்.

மேலும் பூச்சி மற்றும் பூஞ்சாண தாக்குதலுக்கு உள்ளாகி விதையின் முளைப்புத்திறன் பாதிக்கப்படும். எனவே விவசாயிகள் தங்களிடமுள்ள விதைகளை பரிசோதனை செய்து விதைப்பதினால் பயிர் இழப்பினை தடுக்கலாம். விதையின் முளைப்புத்திறன் அறிந்து விதைப்பதன் மூலமாக விதையின் அளவை சரியாக பயன்படுத்த முடியும்.

உளுந்து சாகுபடி செய்யும் விவசாயிகள் மற்றும் விதை உற்பத்தியாளர்கள் அதிக மகசூல் பெற உளுந்தின் தரத்தை பரிசோதனை செய்து பயன்படுத்த வேண்டும் என திருச்சிமாவட்ட விதை பரிசோதனை அலுவலர் வே.அறிவழகன் தெரிவித்து உள்ளார்.

எனவே விவசாயிகள் தாங்கள் வைத்துள்ள விதைக்குவியலில் இருந்து 1 கிலோ உளுந்து விதையை எடுத்து துணி பைகளில்




இட்டு பயிர் இரகம் மற்றும் குவியல் எண் போன்ற விவரங்கள் கொண்ட சீட்டினை வைத்து விதை பரிசோதனை நிலையத்திற்கு அனுப்ப வேண்டும்.

திருச்சி மாவட்டத்தில் விதை பரிசோதனை நிலையம் ஒருங்கிணைந்த விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு அலுவலக வளாகம், தரை தளம், புத்தூர் நான்கு ரோடு, திருச்சி –17 என்ற முகவரியில் அமைந்துள்ளது.

ஒரு விதை மாதிரிக்கு ரூ.80 பரிசோதனை கட்டணம் செலுத்த வேண்டும் என திருச்சி மாவட்ட விதை பரிசோதனை அலுவலர் வே.அறிவழகன், வேளாண்மை அலுவலர்கள் ந.சி.அனிதா மற்றும் ரெ.ரமாபிரபாநளினி ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


Rithvik® Pipe
PIPING FOR LIFE
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERALS
இந்தியாவில் முதல் முறையாக ISI PVC பைப்புகளுக்கு
25 வருட உத்திரவாதம் தரும் ஓரே நிறுவனம்
ஒவ்வொரு பைப்புகான ஆய்வக சோதனை அறிக்கை ஒவ்வொரு பைப்பிலும் QR CODE மூலம் கொடுக்கபட்டுள்ளது.
ஒவ்வொரு பைப்புக்கும் 25 வருட உதிரவாதம் (6 KG - க்கு மேல்)
ஒவ்வொரு ரித்விக் பிவிசி பைப்புகளும் இந்திய தர நிர்ணய பணியகம் (பிஐஎஸ்) நிர்ணயித்த கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தபட்டு தயாரிக்கப்படுகிறது.
ஒவ்வொரு ரித்விக் PVC பைப்புகள் உயர்தர மூலப்பொருட்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. தரம் மற்றும் நீண்ட ஆயுளை உறுதி செய்கிறது.
வியாபார தொடர்புக்கு
வெங்கடரமனன் - 7561822226,9645877779
RITHVIK PIPE

# மானாவாரியில் வருமானம் தரும் பெருநெல்லி சாகுபடி

நேற்றைய தொடர்ச்சி...

**பின்செய் நேர்த்தி**

செடிகள் நன்கு வளரும் பருவத்தில் வேர்ச் செடியிலிருந்து வளரும் கிளைளை வெட்டி நீக்க வேண்டும். ஒரு மீட்டர் உயரத்திற்குச் செடி வளர்ந்த பின் பக்கக் கிளைகளை வளர விட வேண்டும். நான்கு புறமும் படரக்கூடியதாக 5 முதல் 6 கிளைகளை வளர விட வேண்டும்.

**ஊடுபயிர்**

நெல்லி மரங்கள் நன்கு படர்ந்து வளர 5 முதல் 6 வருடங்கள் ஆகும். எனவே இந்த காலகட்டத்தில் குறுகிய கால காய்கறிப் பயிர்கள், பயறுவகைப் பயிர்கள் போன்றவற்றை ஊடுபயிராகச் சாகுபடி செய்வதன் மூலம் கூடுதல் வருமானம் பெறுவதுடன் மண்ணின் வளமும் உயரும்.

**நிலப்போர்வை அமைத்தல்**

பயிர் கழிவுகளைக் கொண்டு நிலப்போர்வை அமைப்பதால் நீராவியாதல் குறைக்கப்பட்டு மண்ணின் வளம் மேம்படுகிறத. களைகளின் வளர்ச்சி தடுக்கப்பட்டு மண்ணில் நுண்ணுயிர் களின் செயல்பாடு அதிகரித்து வேர் மண்டலத்தில் நிலவும் சூழ்நிலை மேம்பாடாக அமைகிறது.

**பயிர் பாதுகாப்பு**

**தண்டு வீங்கி**

இப்பூச்சியைக் கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட ஒரு லிட்டர் தண்ணீருக்கு இமிடாகுளோபிரிட் 2 கிராம் அல்லது வெர்டி சிலியம் லெக்கானி பூஞ்சாணக் கரைசல் 2 மி.லி வீதம் கலந்து 15 நாட்கள் இடைவெளியில் இரு முறை தெளிக்க வேண்டும்.

**அசுவினி**

இளம் குஞ்சிகள் மற்றும் தாய் பூச்சிகள் இளம் தண்டுகளிலும் இலைகளிலும் இருந்து சாற்றை உறிஞ்சி சேதப்படுத்துகின்றன. இப்பூச்சியைக் கட்டுப்படுத்த டைமெத்தோயேட் 0.05 சதம் வீதம்

3 வார இடைவெளியில் தெளிக்கலாம். வேப்பங்கொட்டை சாறு கரைசல் 5% வீதம் 10 நாட்கள் இடைவெளியில் தெளிக்கலாம்.

**இலை பிணைக்கும் புழு**

இப்பூச்சியின் புழுக்கள் இலைகளை ஒன்றாக நூலம்படை கொண்டு பிணைத்து உள்ளே இருந்து கொண்டு இலைகளை தின்று சேதப்படுத்தும். இப்பூச்சியைக் கட்டுப்படுத்த டைமெத்தோயேட் 0.05 சதம் வீதம் 3 வார இடைவெளியில் தெளிக்கலாம். வேப்பங்கொட்டை சாறு கரைசல் 5 சதம் வீதம் 10 நாட்கள் இடைவெளியில் தெளிக்கலாம்.

**மாவுப் பூச்சி**

இளம் குஞ்சிகள் மற்றும் தாய் பூச்சிகள் இளம் தண்டுகளிலும் இலைகளிலும் இருந்து சாற்றை உறிஞ்சி சேதப்படுத்துகின்றன. இப்பூச்சியைக் கட்டுப்படுத்த டைமெத்தோயேட் 0.05 சதம் வீதம் 3 வார இடைவெளியில் தெளிக்கலாம். வேப்பங்கொட்டை சாறு கரைசல் 5% வீதம் 10 நாட்கள் இடைவெளியில் தெளிக்கலாம்.

**கம்பளிப் புழு**

இளம் புழுக்கள் இலைகளை தின்று சேதப்படுத்தும். இப் பூச்சியைக் கட்டுப்படுத்த டைமெத்தோயேட் 0.05 சதம் வீதம் 3 வார இடைவெளியில் தெளிக்கலாம். வேப்பங்கொட்டை சாறு கரைசல் 5 சதம் வீதம் 10 நாட்கள் இடைவெளியில் தெளிக்க லாம்.

**பழத்துளைப்பான்**

இதனைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு கார்பரில் 2 கிராம் அல்லது இமிடாகுளோபிரிட் 2 கிராம் அல்லது வெர்டி சிலியம் லெக்கானி பூஞ்சாணக் கரைசல் 2 மி.லி வீதம் கலந்து தெளிக்க வேண்டும்.

**பட்டை தின்னும் புழு**

இதன் புழுக்கள் கிளைகள் தண்டுடன் இணையும் பகுதியில் துளையிட்டு தண்டுப்பகுதியை தின்று சேதப்படுத்தும். இப்புழு தாக்கிய பகுதியில் நூலாம்படையுடன் புழுவின் எச்சமும் காணப் படும். இப்பூச்சியைக் கட்டுப்படுத்த டைமெத்தோயேட் 0.05 சதம் வீதம் 3 வார இடைவெளியில் தெளிக்கலாம். வேப்பங்கொட்டை சாறு கரைசல் 5 சதம் வீதம் 10 நாட்கள் இடைவெளியில் தெளிக்கலாம்.

### வட்ட துருநோய்

இந்த நோய் காய்கள் மற்றும் இலைகளில் பழுப்பு அல்லது கருப்பு நிறத்தில் வட்ட வடிவ புள்ளிகளை உண்டாக்கும். நோயைக் கட்டுப்படுத்த நனையும் கந்தகம் 5 கிராம் அல்லது மாங்கோசெப் 2 கிராம் வீதம் ஒரு லிட்டர் நீரில் கலந்து 10 முதல் 12 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்க வேண்டும்.

### ஆந்திரக்னோஸ்

நோய் தாக்கிய காய்களில் வட்ட வடிவில் குழிந்த கருப்பு கலந்த பழுப்பு நிறப்புள்ளிகள் காணப்படும். இந்த நோயைக் கட்டுப் படுத்த மாங்கோசெப் 0.2 சதம் அல்லது குமான் எல் 0.3 சதம் அல்லது கேப்டா;ப் 0.2 சதம் அல்லது குளோரோதலானில் 0.2 சதம் அல்லது காப்பர் ஆக்சிகுளோரைடு 0.3 சதம் தெளிக்கலாம். கோடை காலத்தில் நிலத்தை ஆழமாக உழவு செய்து பூஞ்சான வித்துக்களை அழிக்கலாம்.

### பழ அழுகல் நோய்

பழங்களின் மேற்பரப்பில் நீரில் நனைந்தது போன்ற வட்ட வடிவமான அல்லது ஒழுங்கற்ற புள்ளிகள் நிலம் கலந்த சாம்பல் நிறப்புள்ளிகள் காணப்படும். இப்புள்ளியின் மையப்பகுதி ஆரஞ்சு கலந்த சிவப்பு நிறமாக இருக்கும். இந்த நோயைக் கட்டுப்படுத்த பூக்கும் சமயத்தில் காப்பர் ஆக்சிகுளோரைடு 2 கிராம் ஒரு லிட்டர் நீர் என்றளவில் கலந்து தெளிக்க வேண்டும்.

அறுவடைக்கு 15 நாட்கள் முன்னர் கார்பன்டாசிம் அல்லது டாப்சின் அல்லது பில்லோடாக்ஸ் அல்லது பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் 1 கிராம் வீதம் ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். நோய் தாக்கிய பழங்களை சேகரித்து அழிக்க வேண்டும். அறுவடை, சேமிக்கும் போது சந்தைக்கு எடுத்து செல்லும் போது காய்களில் காயங்கள் ஏற்படாதவாறு பார்த்து கொள்ள வேண்டும். அறுவடை செய்த பழங்களை போராக்ஸ் அல்லது சோடியம் குளோரைடு 20 கிராம் அல்லது கால்சியம் குளோரைடு 1.5 கிராம் அல்லது ஜி.ஏ 3 200 மி.கிராம் வீதம் ஒரு லிட்டர் நீரில் கலந்த கரைசலில் ஊற வைத்து பின்பு சேமிக்கலாம்.

### பழகருகல் நோய்

இது ஒரு பயிர் விளையியல் நோய் ஆகும். இது போரன் சத்து பற்றாகுறையால் உண்டாகிறது. பழத்தோலின் மேல் பழுப்பு

நிறப்புள்ளிகள் தோன்றி காயின் சதைப்பகுதி பழுப்பு கலந்த கருப்பு நிறமாக மாறி விடும். இந்த நோயைக் கட்டுப்படுத்த போராக்ஸ் 6 கிராம் வீதம் ஒரு லிட்டர் நீர் என்றளவில் கலந்து செப்டம்பர் மாதம் முதல் 15 நாட்கள் இடைவெளியில் 3 முறை தெளிக்க வேண்டும்.

### அறுவடை

நெல்லி காய்க்கத் தொடங்கும் பருவத்தில் காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருக்க வேண்டும். இல்லையென்றால் பூக்கள் காயாக மாறாது. பிஞ்சுக் காய்களும் உதிர்ந்து விடும். இப்பயிர் பிப்ரவரி முதல் மார்ச் மற்றும் ஜூன் முதல் ஜூலை மாதங்களில் பூக்கிறது. ஜூன் முதல் ஜூலை மாதங்களில் பூக்கும் பூக்களிலிருந்து அதிகளவில் காய்கள் கிடைக்கின்றன. நெல்லித் தோப்பில் தேனீக்களை வளர்ப்பதன் மூலம் அயல் மகரந்தச் சேர்க்கை அதிகரித்து மகசூல் கூடும். மரங்கள் 3ம் ஆண்டு முதல் மகசூல் தரத் தொடங்கும். சுமார் 5ம் வருடம் முதல் மரம் ஒன்று 40 முதல் 65 கிலோவும், 10 ஆண்டு முதல் ஒரு மரம் 100 கிலோவும் மகசூல் கிடைக்கும். எக்டருக்கு 12 முதல் 13 டன்கள் வரை ஆண்டிற்கு மகசூல் தரும்.

### அறுவடை பின் தொழில்நுட்பம்

அறுவடை செய்த காய்களை கால்சியம் நைட்ரேட் 1 சதம் கரைசலில் 3 நிமிடங்கள் ஊற வைத்து பின் காய்களை உலர வைக்க வேண்டும். உலர்ந்த காய்களை துளையிட்ட பாலித்தீன் பைகளில் சேமித்து வைத்தால் காய்களின் ஈரப்பதமும், எடையும் குறையாமல் இருக்கும். அறுவடை செய்த காய்களை கைனடின் 10 பி.பி.எம் (ஒரு லிட்டர் நீரில் 10 மில்லி கிராம் கைனடின் வீதம்) கரைசலில் 3 நிமிடங்கள் ஊற வைத்து பின் காய்களை உலர வைக்க வேண்டும். உலர்ந்த காய்களை துளையிட்ட பாலித்தீன் பைகளில் சேமித்து வைத்தால் காய்கள் தொடர்ந்து 9 நாட்களுக்கு அறை வெப்பநிலையில் எந்தவித பாதிப்பும் இன்றி இருக்கும். நெல்லிக் காய்களிலிருந்து பல மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை தயாரித்து விற்பனை செய்வதன் மூலம் அதிகமாக உற்பத்தியாகும் காலங்களில் காய்களை வீணக்காமல் நல்ல விலையினைப் பெற முடியும்.

தகவல் : **அ.சோலைமலை, ப.ஆர்த்தி ராணி, வி.சஞ்சீவ்குமார்** மற்றும் **க.அண்ணாசாமி, வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி – 628501.**

**முற்றும்.**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# மண் பரிசோதனை அடிப்படையில் விவசாயிகள் பயிர் செய்வதற்கான ஆலோசனை கூட்டம்




தேனி, ஜன.23

காலநிலையை மீட்டெடுத்தல், தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுதல், மண்ணில் பல்லுயிர் பெருக்கத்தை மேம்படுத்துதல், புதுப்பிக்கத்தக்க இயற்கை ஆற்றலான பயோகேஸ், சோலார் மூலம் சூழலை மேம்படுத்துவது தொடர்பான UNDP-SGP 'சுற்றுச்சூழல் மற்றும் வாழ்வாதார பாதுகாப்பிற்கான கால நிலை மாற்றத்திற்கேற்ப தரிசுநில மேம்பாடு' திட்டத்தை தேனி மாவட்டம் விடியல் நிறுவனம், ஒத்தக் கருத்துக்களுடைய கூட்டாளிகளுடன் இணைந்து மக்கள் பங்கேற்பு மற்றும்பங்களிப்புடன் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், கட்டங்குடி மற்றும் செம்பட்டி பஞ்சாயத்துகளில் செயல்படுத்திக் கொண்டு வருகிறது.

திட்டம் மேம்பாடு தொடர்பான தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுதல் மற்றும் பல்லுயிர் பெருக்கம் செயல்பாடுகளில் மண் பரிசோதனை மற்றும் நீர் பரிசோதனை செய்து விவசாயிகள் ஏற்கனவே தங்கள் நிலங்களில் மண் மற்றும் நீர் பரிசோதனை செய்த அறிக்கையின் அடிப்படையில் விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் அவர்கள் நிலங்களின் தன்மை,

ஊட்டச்சத்து குறைபாடு, பயிரிடுவதற்கான ஏற்ற பயிர்கள், ஏற்ற உரங்கள், உரமிடும் முறைகள் பற்றிய விளக்கத்தையும், விவசாயிகளின் கேள்விகளுக்கு தகுந்த விளக்கங்களையும்மண் பரிசோதனை ஆய்வாளர்கள் K.முருகேசன், V.ஜெயச்சந்திரா ஆகியோர் நடமாடும் மண் பரிசோதனை வாகனம் மூலம் செம்பட்டி ஊராட்சியில் 30-க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு வழங்கினார்கள். மேலும் 20-க்கும் மேற்பட்ட விவசாயிகள் சேகரிக்கப்பட்ட நீர் மற்றும் மண்பரிசோதனை செய்வதற்கு வழங்கினார்கள்.

இந்தக் கலந்துரையாடலில் ஊராட்சி மன்றத் தலைவர் தனலட்சுமி சின்னப்பாண்டி தலைமையேற்க, K.காமராஜ், நிறுவனர் விடியல் முன்னிலை வகித்தார். K.வினோபாலாஜி, திட்ட இயக்குநர், விடியல் பங்கேற்பாளர்களை வரவேற்று கூட்டத்தின் நோக்கத்தை எடுத்துரைத்தார். K.காசிராஜ், ஒருங்கிணைப்பாளர் நிகழ்ச்சியினைத் தொகுத்து வழங்கினார். K.புஷ்பராஜ் நன்றி கூறினார்.

# தரமற்ற 211 மெ.டன் விதைக்குவியல்களுக்கு விற்பனை தடை

ஈரோடு, ஜன.23

ஈரோடு மாவட்டத்ததை தலைமை இடமாகக் கொண்டு தமிழ்நாடு அரசு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் கீழ் செயல் படும் விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றிப்புத்துறையின் ஓர் அங்கமாக விதை ஆய்வு துணை இயக்குநர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்டம் முழுவதும், திருப்பூர் மாவட்டத்தின் ஒரு பகுதியும் ஆளுகை எல்லைகளாக கொண்டு செயல்படும் இத்துறையின் கீழ் மொத்தம் 740 விதை விற்பனை நிலையங்கள் உள்ளது. இதில் 73 அரசு துறையையும், 30 பகுதி அரசு துறையையும், மீதம் 637 தனியார் விதை விற்பனை நிலையங்கள் ஆகும். இவற்றுள் 86 எண்கள் காய்கறி, தென்னை மற்றும் பழமர நாற்றுகள் விற்பனை நிலையங்கள் ஆகும்.

விதை சட்டம் 1966 இன் படி விதை என்பது அடுத்த தாவர தலைமுறையை உருவாக்கக்கூடிய வித்தாகும். இவை மனிதர் களும் கால்நடைகளும் உண்ணக்கூடிய அனைத்து வகையான தாவரங்களின் பிறப்பாக்க மூலங்களான விதைகள், வெட்டுத்துண்டு கள், குமிழ்கள் முதலியன ஆகும். இவை அனைத்து தாவர மூலங்களும் உற்பத்தி செய்யவும், விற்பனை செய்யவும், விதை உரிமம் பெறுவது கட்டாயமாகும். விதை உரிமம் பெறாமல் விதை உற்பத்தி, விநியோகம், விற்பனை செய்வது சட்டப்படி குற்றமாகும். மேலும், விதை உரிமம் பெற்றவர்கள் இச்சட்டத்தின் கீழ் எந்த ஒரு விதிமீறல் இல்லாமல் விற்பனை செய்வது அவசியமாகும்.

ஈரோடு, விதை ஆய்வு துணை இயக்குநர் பெ.சுமதி தலைமையின் கீழ் ஈரோடு, கோபி, பவானி, சத்தியமங்கலம் மற்றும் காங்கேயம், தாராபுரம் விதை ஆய்வாளர்கள் அடங்கிய குழு விதை ஆய்வு துணை இயக்குநர் ஈரோடு ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் அவ்வப்போது திடீர் குழு ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். அப்போது விதிமீறல் காணப்பட்ட நெல், மக்காச்சோளம், வீரிய ரக காய்கறி விதை குவியல்கள் தரமற்ற ரூ.140 இலட்சம் மதிப்பிலான 211 மெ. டன்அளவிலான 111 விதைக்குவியல்களுக்கு விற்பனை தடை விதிக்கப்பட்டு, விதை விற்பனையாளர்கள் மீது உரிய துறை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை 3203 விதை மாதிரிகள் முளைப்புத்திறன் ஆய்வு பரிசோதனைக்காகவும், 310 இனத்தூய்மை பரிசோதனைக்கும் 109

பருத்தி விதைகள் பிடி பரிசோதனைக்காகவும் எடுக்கப்பட்டு ஆய்வறிக்கை பெற்றதில் சுமார் 53 விதை மாதிரிகள் முளைப்புத் திறனில் தேர்ச்சி பெறாததால் 45-விதை விற்பனையாளர்கள் மீது துறை நடவடிக்கை எடுக்கப்பட்டும் 8 விதை விற்பனையார்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு விதை சட்டம் 1966 – பகுதி 19(a) மற்றும் பகுதி 7 (b) ன் கீழ் குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து விதைஆய்வுத் துணை இயக்குநர் கூறுகையில் விதை விநியோகஸ்தர்கள் விதை உரிமம் பெற்ற விதை விற்பனையாளர்கள் மட்டுமே விதை விநியோகம் செய்ய வேண்டும். மேலும், விதை இரகங்கள் பதிவு சான்று பெறப்பட்டுள்ளதா அல்லது பதிவு சான்று காலாவதி ஆகாமல் உள்ளதா என்பதை உறுதி செய்த பின்னரே விதை விநியோகம் செய்ய வேண்டும். ஒவ்வொரு விதை குவியல்களுக்கும் முளைப்புதிறன் அறிக்கை பெற்றிருக்க வேண்டும் என்றும் கூறினார். விவசாயிகள் விதைகள் வாங்கும் போது கையொப்பமிட்டு விதை விற்பனை இரசீது பெற்ற பின்னரே விதைகளை வாங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

## தென்னையைத் தாக்கும் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ மேலாண்மைப் பயிற்சி மற்றும் செயல் விளக்கம்



கிருஷ்ணகிரி, ஜன.23

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், அத்திமுகம் கிராமத்தில் அமைந்துள்ள அதியமான் வேளாண்மைக் கல்லூரி மற்றும் இந்திய அரசின் தென்னை வளர்ச்சி வாரியம், வேளாண் மற்றும் உழவர் நல அமைச்சகம் சார்பாக தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ மேலாண்மைப் பயிற்சி மற்றும் செயல் விளக்கம் பர்கூர் வட்டத்திலுள்ள சிந்தகம்பள்ளி கிராமத்தில் நடைபெற்றது.

பர்கூர் வட்டத்திலுள்ள சின்னமட்டாரப்பள்ளி, சின்னபூங் குறுத்தி, குருவிநாயனபள்ளி, ஓதிகுப்பம், காரகுப்பம், கெம்பி நாயணபள்ளி சிந்தகம்பள்ளி கிராமங்களை சார்ந்த உழவர் பெருமக்கள் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர். முனைவர் சீ. ஸ்ரீதரன், கல்லூரி முதல்வர் இப்பயிற்சியை துவக்கி வைத்து தென்னையை தாக்கும் பூச்சிகள் பற்றியும் அதன் மேலாண்மைத் தொழில் நுட்பங்களைப் பற்றியும் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் தென்னை வளர்ச்சி வாரியத்தின் இயக்குநர் இள.அறவாழி முதன்மை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உழவர்களிடம் தென்னை சாகுபடி பற்றியும் அதன் மதிப்பு கூட்டுதல் பற்றியும் விவரித்தார். மேலும் சிறப்பு விருந்தினராக வேளாண் அறிவியல் நிலையத்தின் உழவியில் துறை பேராசிரியர் முனைவர் சிவகுமார் மற்றும் கல்லூரியின் ஒருங்கிணைப்பாளர் வெ.குப்புசாமி பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார்கள். முனைவர் பி.செந்தமிழ்ச்செல்வி, இணை பேராசிரியர் (தோட்டக்கலைத் துறை), தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தென்னையின் ரகங்களை பற்றி விரிவாக விளக்கினார்.

இதனைத் தொடர்ந்து ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ மேலாண்மை பற்றி முனைவர் பா.பூவிழிராஜா, உதவி பேராசிரியர் (தாவர பூச்சியியல்) மற்றும் தென்னையில் ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை பற்றி போ.பூபதி, உதவி பேராசிரியர் (தாவர நோயியல்) எடுத்துரைத்தனர். பின்னர் இக்கல்லூரி முதல்வர் தலைமையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ – ற்கு ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை தொழில்நுட்பம் பற்றி செயல் விளக்கம் கொடுக்கப்பட்டது. இச்செயல் விளக்கத்தின் போது நன்மை செய்யும் பூச்சியின் பயன்கள், பாதுகாப்பு முறைகள் மற்றும் மஞ்சள் நிற ஒட்டுபொறி பயன்படுத்துதல் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துரைக்க பட்டது. உழவர் பெருமக்களிடம் மதிய உணவின் போது தொழில்நுட்ப கருத்து பரிமாற்றம் நடைப்பெற்றது.

நிகழ்ச்சியின் முடிவில் அனைத்து விவசாயிகளுக்கும் தென்னை டானிக் மற்றும் மண் புழு உரம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நூற்றிற்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு வருகை புரிந்த உழவர் பெருமக்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. முனைவர் க.தையல்நாயகி, உதவி பேராசிரியர் (தாவர பூச்சியியல்) வரவேற்புரையாற்றினார். முனைவர் சு.ஜனனி, இணை பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்) மற்றும் ம.கவிநிலா, உதவி பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்) இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்கள்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**